# நிறைவேற்றுப் பொழிப்பும் சிபாரிசுகளும்

**இந்த அறிக்கையின் குறிக்கோளும் அணுகுமுறையும்:**

**அனர்த்த முகாமைத்துவம்:**

கொள்கையும் நடைமுறையும் என்பன இந்த மீளாய்வில் மூன்று மாதங்களுக்கு மேலாக இலங்கையின் கொள்கை ஆய்வுகள் நிறுவகத்தினால் அமெரிக்கா ஒக்ஸ்பாம்[1] உடன் இணைந்து அதன் நிதி ஆதாரத்துடன் நடாத்தப்பட்டது. இது இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கும் அரசாங்கம் சாரா அமைப்புகளுக்கும் பிற பங்குதாரர்களுக்கும் உதவுவதற்காகக் கருதப்பட்டுள்ளது. இயற்கை அனர்த்தங்கள் பற்றிய பாராளுமன்ற தெரிவுக்குழு அதன் சிபாரிசுகளைச் சமர்ப்பித்ததன் பின் ஒரு வருடத்துக்கும் சிறிது கூடுதலான காலம் முடிவடைந்துள்ளது. அதன் சிபாரிசுகளின் செய்முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை மீளாய்வு செய்வதற்கு இது உரிய காலம் போலத் தோற்றுகின்றது. இந்த அறிக்கையானது கொள்கை ஆவணங்கள், சட்ட ஆவணங்கள், மற்றும் அரசாங்கம், சிவில், சமூகம், தனியார் துறையின் பங்குதாரர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்முக உரையாடல்கள் மற்றும் அம்பாறை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள அறிக்கைள் மற்றும் 2006 செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று அம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்பட்ட வேலைக்களம் மற்றும் 2006 செப்டெம்பர் 28 ஆம் திகதியன்று 90க்கும் மேற்பட்ட பங்குபற்றுபவர்களுடன் கொழும்பில் நடாத்தப்பட்ட ஓர் தேசிய வேலைக்களத்தில் செய்யப்பட்ட பகுப்பாய்வு ஒன்றின் அடிப்படையிலானது.

**அனர்த்த முகாமைத்துவம்: வாய்ப்புகளும், சவால்களும்:**

2004 ஆம் ஆண்டின் சுனாமிக்குப் பின்னர் அனர்த்த முகாமைத்துவமானது புதிய அரசாங்க கட்டமைப்புகள், தலைவீடுகள் மற்றும் அரசாங்கம் சாரா அமைப்புக்களுடனும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுடனும் கவனத்தில் கொள்ளப்பட்ட மிகவும் உயர்ந்த முன்னுரிமை விடயமாகியுள்ளது. இது அனர்த்த முகாமைத்துவத்தின் அலங்கோலமான முறைமையொன்றுக்குப் பதிலாக ஓர் ஒழுங்குமுறையில் அதை வைத்திருப்பதற்கு அரசியல் கவனம் செலுத்தப்பட்டு நிதி முதலீட்டு முயற்சிகள் யாவற்றையும் உபயோகிப்பதற்கு தலைமுறைக்கு வழங்குகின்ற ஓர் பெரிய வாய்ப்பாக உள்ளது.தற்பொழுது பெருமளவு வளங்களுடன் உள்ள இலங்கையானது எதிர்காலத்துக்கான முதலீட்டை புத்திசாதுரியத்துடன் முதலீடு செய்ய வேண்டிய தேவையைக் கொண்டுள்ளது. ஆனால் அமைப்புக்களின் எண்ணிக்கையும் வெவ்வேறு தலைவீடுகளின் தொடர்ச்சியும் மாத்திரம் பாகங்கள் மற்றும் பொறுப்புக்களின் தெளிவுத்தன்மை ஆகிய புதிய சவால்களை உருவாக்குகின்றது என்பதுடன் பாதிப்புக்குள்ளான மக்கள் மீது தீவிர கவனத்தை வைத்திருக்க வேண்டிய தேவையையும் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சில தலைவீடுகளின் நிதி மற்றும் நிறுவன ரீதியான நிலை ஆகியவற்றின் மீது தீவிர கவனத்தை வைத்திருக்க வேண்டிய தேவையையும் அவை ஏற்படுத்துகின்றன. ஓர் எதிர்கால சுனாமி அனர்த்தத்தின் தாக்கங்களைத் தடை செய்வதற்கு இன்னும் பெருமளவு செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இது அதிதீவிர கவனத்தைப் பெற்றுள்ளது. தெற்கிலும் வடக்கிலும் உள்ள சுனாமியினால் பாதிக்கப்பட்ட 74 கிராம உத்தியோகத்தர்களின் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட 600 குடும்பங்களின் கொள்கை கற்கை நிறுவனத்தின் அளவையொன்று குடும்பங்களின் 50 சதவீதத்தினர் வெளியேறிச் செல்வதற்கு பாதுகாப்பான இடங்களைக் கண்டறிந்துள்ளது என்பதைக் காண்பிக்கின்றது. 6 சதவீதத்தினர் மட்டுமே உண்மையில் சுனாமி வெளியேற்றத்தை நடைமுறையில் பின்பற்றியுள்ளனர் என்பதுடன் 4 சதவீதமானவர்கள் மட்டுமே எதிர்கால அனர்த்தங்களுக்கு எதிராக எந்தக் காப்புறுதியையும் கொள்வனவு செய்யக்கூடியவர்களாக இருந்தனர்.

---

1. இந்த அறிக்கையானது போல் ஸ்டீல்,மலர்,றைட் ஜோன் ஆகியவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் அம்ரிக் ராஜபக்ஸ, காஞ்சனா சேனாநாயக்க, காஞ்சனா விக்கிரமசிங்க, எஸ்.சீ.லேகம்கே,கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயில் ஆகியோர்களினால் வழங்கல் வேலையில் செய்யப்படும் உதவியுடன் கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் ஆராய்ச்சிக் குழுவொன்றினால் பொறுப்பேற்கப்பட்டது. ஒக்ஸ்பாம்அமெரிக்க வேலைத்திட்ட முகாமையாளர் நந்திரா ஹெட்டிதத்திடமிருந்து பெறப்பட்ட வழிகாட்டலுக்கும் அவருடைய ஒக்ஸ்பாம் சகபாடிகளாகிய ஹேமந்த சித்திரசேன, செரியன் மத்தியூஸ், எஸ். மரியதாஸ், மெனிக் குணத்திலக ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்ட கருத்துக்களுக்கும் நாம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம். விசேடமாக அரசாங்க முகவர் நிலையங்களிடமிருந்து எமக்கு கிடைத்த ஆதரவிற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையங்களிடமிருந்தும் தன் பணிப்பாளர் அதிபதியிடமிருந்தும் பெற்றுக் கொண்ட ஆதரவிற்கு நாம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். பணிப்பாளர் அதிபதி மேஜர் ஜெனரல் ஹெட்டியாராச்சியிடமிருந்தும், அனர்த்த முகாமைத்துவக் குழு அம்பாந்தோட்டை குழுவிற்கும், பிரிவு ஆணையாளர் சந்திரபாலன், பிளைட்லெட்டினன்ட் செனத் பீரீஸ் ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். எனினும் இந்த அறிக்கையானது தனது ஆசிரியர்களின் கருத்துக்களைக் காண்பிக்கின்றது என்பதுடன் இது அவசியமாக கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் அல்லது ஒக்ஸ்பாம் தாபனத்தின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை.

**இலங்கையின் வரலாற்றில் அனர்த்தங்கள் ஓர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் விடயமாக இருத்தல்:**

2004 டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட சுனாமி இலங்கையின் அதிதிட்டவட்டமான ஞாபகத்தில் நிலைத்துக்கொண்டிருக்கும் ஓர் இயற்கை அனர்த்தமாக உள்ளது. இந்த அனர்த்தத்தில் 35,000க்கும் மேலான தொகையினர் இறந்துள்ளனர். ஒரு மில்லியனுக்கு மேற்பட்டோர் இடம் பெயர்ந்துள்ளனர். எனினும் இலங்கையின் சில பகுதிகள் கிரமமாக வெள்ளப்பெருக்கினால் அல்லது வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன. 1989ஆம் ஆண்டிலும் 2003ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மொத்தமாக 560 நபர்களைப் பலிகொணடுள்ளது. 1978 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சூறாவளி 740 பேர்களைக் கொன்றழித்தது. 1987,1983,1982,ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் அனேகமாக 2மில்லியன் மக்களை வரட்சி பாதித்துள்ளது. இது சுனாமியால் ஏற்பட்ட பாதிப்பை விட இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை அற்பமானதாக இருந்த போதிலும் கூடுதலானதாக இருந்தது. மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் மற்றும் 20 ஆண்டுக்கான சிவில் யுத்தங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த போராட்டத்தில் 65,000க்கும் மேற்பட்டோர் இறந்திருப்பதுடன் தற்போது சனத்தொகையில் 2 சதவீதமானவர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளதுடன் பல ஆயிரக்கணக்கானோர் இப்போராட்டத்தின் விளைவாக வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்துள்ளார்கள்.

## அனர்த்தம் முகாமைத்துவம் மீது பணியாற்றுகின்ற அனைவர்களுக்கும் முக்கியமான சிபாரிசுகள்

**பாதிக்கப்பட்ட மக்களைச் சமாளிக்கும் உபாயத்திறன்கள் பேரிலான தீவிர கவனிப்பு:**

அனர்த்தங்களின் குறைப்பிற்கும் அவற்றை எதிர்நோக்குவதற்கும் தயார்நிலையில் இருப்பதற்கும் அனுசரணை வழங்குவதற்கும் உள்நாட்டு மக்கள் சமாளிக்கும் உபாயங்களை வைத்திருக்கின்றனர். (உ:ம் பாதுகாப்பான இடங்களும்,எச்சரிக்கையும்) அவர்கள் தான் அவற்றிற்கு அனுசரணை வழங்குவதா அல்லது,அனுசரணை வழங்காமல் விடுவதா என்பதை முதலில் தீர்மானிப்பவர்களாவர். ஏனையோர்கள் அவர்களுடைய தேவைகளுக்கும் அக்கறைகளுக்கும் சேவை வழங்குதல் வேண்டும். (உ-ம் 2004 சுனாமி அனர்த்தங்களுக்கும் பின்னரான அநேக பிழையான எச்சரிக்கைகள்) அவர்கள் அனர்த்த முகாமைத்துவத்தில் இருந்து பெருமளவு நன்மையை பெறுவதற்கும் ஓர் அனர்த்தம் நடைபெறும் இடத்தின் முதலாவதாக இருப்பவர்களுமாகவிருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு என்ன தேவை என்பதையும் அது ஏன் தேவை என்பதையும் கண்டுப்பிடிப்பது முக்கியமானதாகும். அவர்களுக்கு சில தேர்ச்சிகளும் நிதியங்களும் இல்லாமல் இருக்கலாம். எனவே அனர்த்தங்களுக்கு அரசாங்கத்திடமிருந்தும் அரசாங்கம் சாரா அமைப்புகளிடமிருந்தும் தனியார் துறையிலிருந்தும் ஆதரவு தேவைப்படுகின்றது.

**பலவீனமானவர்களும் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளவர்களுமான மக்களுக்கு விசேட கவனம் தேவைப்படுகின்றது:**

சில மக்கள் அனர்த்தங்களுக்கு உட்படத்தக்க பலவீனம் உடையவர்களாக இருக்கலாம்.(பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள், ஏலாவாளிகள்) என்பதுடன் இவர்களுக்கு விசேட கவனம் தேவைப்படுகின்றது. அடிக்கடி பாதிக்கப்படுபவர்களாகவிருப்பதனாலும் சில இடங்களில் இது நிகழ்வதற்கான திட்டவட்டமான அறிகுறிகள் இருப்பதனாலும் இதில் தீவிரமாக ஈடுபடுவதற்கான தேவை பெண்களுக்கு உள்ளது. பலவீனமான மக்களுக்கு அமைவிடம் சார் குறித்துரைக்கப்பட்ட தீர்வுகளை கண்டறிவதற்கு குடும்பமட்டத்திட்டமிடலும் பங்குபற்றலும் தேவைப்படுகின்றன.

**குறைப்பும் தடுப்புமே தீவிரமான கவனிப்புக்கான விடயமாக இருக்க வேண்டுமேயன்றி அனுசரணை மட்டும் அல்ல:**

குறைப்பும் தடுப்பும் உயிர்களை காப்பாற்றுகின்றதுடன் அனர்த்தத்திற்குப் பிற்பட்ட அனுசரணைகளை விட இவை மிகவும் கூடுதலான செலவு விளை பயனை உடையவைகளாக உள்ளன. செயற்பாடுகள் அனர்த்தம் குறிப்பதற்காக அவசியம் இருத்தல் வேண்டும். வரட்சிக்கான செயற்பாடுகள் குலத்தின் புனரமைப்பையும்,வளர்ச்சிக்குத் தாக்குப் பிடிக்கும் பயிர்களையும் மழைநீர் அறுவடையையும் உள்ளடக்குகின்றன. சுனாமி விடயத்தில் கடற்கரையோர பின்புலங்களும் மற்றும் வன்மையானவைகளும் மென்னையானவைகளுமான கரையோரப் பாதுகாப்புகள் தேவைப்படுகின்றன. பெருமளவு தடுப்பிற்கு உட்கட்டமைப்பின் அமைவிடமும் காணி உபயோகத் தீர்மானங்களும் (விசேடமாக அனர்த்தத்திற்கு உட்படும் அமைவிடங்களில் வீடுகட்டுதலை தவிர்த்தல்) உட்கட்டமைப்பையும் பொருட்களையும் (சட்ட ஒழுங்கு விதிகள்) மீள வடிவமைத்தல் பொதுவானவையாகும்.மீளக் குடியமர்த்தலுக்காக மாற்றுக் காரணங்களை வழங்குவதற்கான முயற்சிகள் முக்கியமானவைகளாகும்.ஆனால் இவை மாற்றுக்

கலப்புச் சாதனைகளைக் கொண்டிருந்தன. பொருத்தமான வழிகாட்டல் பாதிக்கப்பட்ட சமூகங்களினால் கண்டறியப்பட்ட தயார் நிலைச் செயற்பாடுகள் மேலேயிருந்து கீழே என்ற வகை அணுகுமுறைகளை விட மிகவும் கூடுதலான செலவு விளைபயனை உடையதாக இருக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளன. நீண்ட காலப் போக்கு குறைப்புச் செயற்பாடுகள் அறிகுறிகளை மட்டுமே கையாளுகின்றவைகளும் அடிப்படைக்காரணத்தைக் கையாளாதவைகளுமான குறைப்புச் செயற்பாடுகள் தயார் நிலைக்கான பயிற்சியை விடக்கூடுதலான அளவில் முக்கியமானவைகளாகும். தோற்றமளவில் கூடுதலான அளவில் சுலபமானதாகவும் கூடுதலான அளவில் கட்புலனாகின்றவைகளாகவும் தோன்றுகின்ற செயற்பாடுகளின் தயார் நிலை மீது அரசாங்கமும் அரசாங்கம் சாராத அமைப்புகளும் கூடுதலான கவனத்தையும் கூடுதலான முக்கியத்தும் வாய்ந்த குறைப்பு மற்றும் தடுப்பு மீது குறைந்த கவனத்தையும் செலுத்துகின்ற ஆபத்து உள்ளது.

**சுனாமி மீது மட்டுமே தீவிர கவனத்தைச் செலுத்தாத பல்ஆபத்து அணுகுமுறையைப் பின்பற்றவும்:**

உண்மையில் வரட்சி போன்ற குறைந்த அனர்த்தங்களினால் கிரமமாக பெரும் எண்ணிக்கையில் மக்கள் பாதிப்புகளை அடைந்து கொண்டிருக்கும் போது சுனாமி மீது மட்டும் மிஞ்சிய அழுத்தம் கொடுக்கப்படும் ஓர் சார்பு நிலை இருந்துள்ளது. சுனாமி மீதான தீவிர கவனமானது ''இறுதி யுத்தத்தில் போராடுகின்ற ஓர் ஜெனரலைப் போல் இருக்கின்றது. இடி மின்னல் போன்ற இதை விடக் குறைந்த விவரண நிகழ்வுகளும் கூட அளாவப்படுதல் வேண்டும். நிலச்சரிவுகள் மீது நல்ல வேலை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

**ஒரே அளவு சகலருக்கும் பொருத்தமானது என்ற சீர்மைப்பாட்டைத் தவிர்த்து. அமைவிடம் குறித்த அணுகு முறையைப் பின்பற்றவும்:**

திடீர் அனர்த்தங்கள் (அதாவது நிலச்சரிவுகள்) மற்றும் மெதுவான அனர்த்தங்கள் (அதாவது வரட்சி) மற்றும் மனிதனால் உருவாக்கப்படும் அனர்த்தங்கள் இயற்கை அனர்த்தங்கள் போன்ற பல்வேறு அனர்த்தங்களில் பல சவால்கள் உள்ளன. இவையாவும் வெவ்வேறு தலையீடுகளையும் தேர்ச்சிகளையும் வேண்டலாம். "ஒரேயளவு சகலவற்றிற்கும் பொருத்தமானது" என்ற அணுகு முறையை உண்மையிலே அமைவிடத்தையும் குறித்த காரணங்களையும் கொண்ட வெவ்வேறு அனர்த்தங்களுக்கு மேற்கொள்ளும் ஆபத்து ஒன்றுள்ளது.

**பிற நாடுகளில் உள்ள அனுபவத்திலிருந்தும் இலங்கையில் உள்ள புதுமைகளி லிருந்தும் கற்றுக்கொள்ளவும்:**

எந்தத் தலையீடுகள் முக்கியமானவை என்பதை கண்டறிவதற்கும் அவற்றை எந்த சிறந்த முறையில் பொறுப்பேற்கலாம் என்பதையும் கண்டறிவதற்குமாக பிற நாடுகளில் இருந்தும் (உ.ம் பங்களாதேஷ்) மற்றும் இலங்கையில் உருவாகிக் கொண்டிருக்கும் அனுபவத்திலிருந்தும் (உ.ம் பெரலிய சமூக சுனாமிக்கு முற்பட்ட எச்சரிக்கை நிலையம்) ஆகியவற்றில் இருந்து கற்க வேண்டிய தேவை உள்ளது. இறுதி இலக்கை அடைவதில் தொழில்நுட்பமானது எவ்வளவு தூரம் விளைபயனுள்ளதாக இருக்கின்றது? சில தலையீடுகள் இயல்பானவையாகும். நடைமுறைத் தலையீடுகள் இயல்பானவையாகும். ஆனால் நடைமுறையில் அவை கடினமானவையாகும். (யாழ்ப்பாணத்துக்கு உணவை அனுப்புவதற்கு கப்பல்களை பெற்றுக் கொடுப்பதிலும் யாழ்ப்பாணத்தை சென்றடைந்தவுடன் இந்த உணவுகளை இறக்குவதிலும் எதிர் நோக்கப்படும் நடைமுறைப் பிரச்சனைகள்)

**இயற்கை அனர்த்தங்களுக்கும் மனிதனால் உருவாக்கப்படும் அனர்த்தங்களுக்கும் உளவியல் தேவைகள் ஓர் முதன்மையான விடயமாகும்:**

அனேக மக்கள் விசேடமாக சிறுவர்கள் சுனாமி பற்றிய சித்தசுவாதீனமற்ற பயப்பிராந்திய நிலையில் இன்னும் இருப்பதுடன் பயங்கரமான கனவுகளையும் காண்கின்ற நிலையில் இருப்பது பற்றிய சான்று உள்ளது. பிழையான சுனாமி வதந்திகள் காரணமாக அநேக மக்கள் தங்களுடைய வீடுகளிலிருந்து இன்னும் ஓடிக் கொண்டிருக்கின்றனர். தெற்கிலும் கிழக்கிலும் உள்ள 600 குடும்பங்கள் பற்றிய கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் அளவையானது குடும்பங்களின் 10 சதவீதத்தினர்கள் சுனாமி தொடர்பிலான துயரம் காரணமாக தங்களுடைய ஆயுளை முடித்துக்கொள்ள முயல்கின்ற எவரோ ஒருவர் பற்றி அறிந்திருந்தனர். இந்த உளவியல் தாக்கமானது இப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் அக்கறையான விடயமாக உள்ளது. சில வேலைக்கேற்ற ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் இருந்த போதிலும் இச் சேவைகளை அரசாங்க சுகாதார கவனிப்பு முறைமைக்குள் ஒன்றிணைப்பதற்கு இச்சேவைகளுடன் ஓர் நீண்டகால அணுகுமுறை உருவாக்கப்படுவதற்கான தேவை ஒன்று உள்ளது.

**திட்டமிடலிலிருந்து ஒன்றிணைப்பதற்கு நீண்டகால அணுகுமுறை ஒன்றை உருவாக்கு வதற்கான நகர்வு:**

அரசாங்கம் கொள்கையின் பல துறைகளில் உள்ளதைப் போல இலங்கையில் அரசாங்கமானது உயர்ந்த தரத்திட்டங்களையும் வீதிப் படமொன்றையும் பரந்த பங்குபற்றதலுடன் உருவாக்கியுள்ளது. வீதிப்படமானது மாற்றங்களுக்கான நெகிழ்வுடனான உருவாகின்ற ஓர் ஆவணமாக உள்ளது. எனினும் தற்பொழுது தீவிர கவனமானது ஒப்பீட்டளவிலான அனுகூலத்தைக் கொண்டுள்ளவைகளும் அப்பிரதேசங்களில் தொழிற்படுகின்றவைகளுமான முகவர் நிலையங்களுடன் வீதிப் படத்தை நடை முறைப்படுத்துதல் மீது இருத்தல் வேண்டும்.

**தலையீடுகள் உபயோகமானதாகவும் நிதிரீதியாகவும் நிறுவனரீதியாகவும் நிலைபே றுடையதாக விருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும்:**

தலையீடுகள் விசேடமாக துலாம்பரப்படுத்தல் என்பது நகரும் போது ஒரு தடவையேனும் நிலைத்திருக்கக் கூடியதாக பல தொகுதிகள் உருவாக்கப்படுவது முக்கியமானதாகும். இது இலங்கை படிக்கக் கூடிய பிலிப்பைன்சும் பங்களாதேசும் மேற்கொள்ளும் அனர்த்த முகாமைத்துவத்தின் வெற்றியின் ஓர் அம்சமாக உள்ளது. சில இடங்களில் குடும்பங்கள் தாங்கள் பல தொகுதிகளில் இருந்தும் பல பயிற்சிகளை பெறுவதாகவும் அப்பணத்தொகை பிற செயற்பாடுகள் மீது சிறந்த முறையில் செலவு செய்யப்படலாம் என்றும் முறைப்பாடு செய்துள்ளன.சிவில் மக்கள் போராட்டங்களில் அனர்த்த முகாமைத்துவக் குழு செயற்பாடுகளை இராணுவத்தினர்களிடமிருந்து பொறுப்பேற்று பாதிக்கப்பட்ட மக்கள் உள்நாட்டு அரசியல் அமைப்புக்கள் (உ.ம் பிரதேச சபைகள் மற்றும் உள்ளுராட்சிச் சபைகள்) ஆகியவற்றுடன் நெருக்கமாக பணியாற்றவேண்டிய தேவையுள்ளது.

## அரசாங்கத்திற்கு முக்கியமான சிபாரிசுகள்

**அனர்த்தங்களுக்கான அரசாங்கத்தின் முதன்மை வழங்கல் கூடுதலான தெளிவான பாகங்களையும் பொறுப்புகளையும் வேண்டுகின்றது:**

அனர்த்தங்கள் தொடர்பிலான பல்வேறு நிறுவனங்கள் அரசாங்கத்தின் கீழ் உள்ளன. இவை 1996 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடனான (தே.அ.மு.நி) அனர்த்த நிவாரண அமைச்சையும் புதிய அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் 2005 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் அண்மையில் உருவாக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ மனித உரிமைகள் அமைச்சையும் உள்ளடக்குகின்றன. அத்துடன் தேசத்தைக் கட்டியெழுப்பல் அபிவிருத்தி அமைச்சும் சமூக நலனோம்பல் அமைச்சும் உள்ளன. மீள்நிருமாண அபிவிருத்தி முகவர் நிலையமானது நீண்ட கால மீள் நிர்மாணம் மீது பணியாற்றுவதுடன் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அதிபதி உலர் உணவுப் பொருட்கள் நிவாரண வழங்கலுக்குப் பொறுப்பாகவுள்ளார். இந்த நிறுவன ரீதியான அபிவிருத்திகள் அனர்த்த முகாமைத்துவத்திற்கு கூடுதலான முதன்மை வழங்கப்படுவதைச் சுட்டிக்காட்டுகின்றன. புதிய அனர்த்த முகாமைத்துவச் சட்டமும் இந்த விடயம் மீது பணியாற்றுகின்ற முகவர் நிலையங்களும் இயற்கை அனர்த்தங்களுக்கும் மனிதனால் உருவாக்கப்படும் அனர்த்தங்களுக்கும் சமமான அளவில் தீவிர கவனம் செலுத்துவதன் காரணமாக இவை கூட சாதகமானவைகளைாகவுள்ளன.

**அனர்த்த முகாமைத்துவ அமைச்சானது குறைப்பு மீது தீவிரகவனம் செலுத்துதல் வேண்டும்:**

அனர்த்தத்தைக் குறைப்பதுவும் தடுப்பதுவும் உயிர்களைக் காப்பற்றுகின்றதுடன் அனர்த்தத்திற்குப் பின்னரான அனுசரணைகள் வழங்கப்படுவதை விட கூடுதலான அளவில் செலவிற்கான விளைபயனை ஏற்படுத்துவனவாகவுமுள்ளன. இந்த அமைச்சு குறைப்பு மீது தீவிர கவனம் செலுத்த வேண்டும். இது வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் அபாய எச்சரிக்கை நிலையம் போன்ற இந்த அமைச்சின் கீழ் வரும் அநேக முகவர் நிலையங்கள் தயார் நிலை மீதும் பிற அமைச்சுகளின் கீழ் வருகின்ற அநேக குறைப்புக் செயற்பாடுகள் (உதாரணம் காணி உபயோகத்திட்டமிடல், கட்டட ஒழுங்குவிதிகள்) மீதும் தீவிர கவனம் செலுத்துமென்பதன் காரணமாக இது ஓர் சவாலாக விருக்கும். இதனால் இறுக்கிப்பிடிக்கப்பட்ட தேசிய அனர்த்தங்கள் மீதான பாராளுமன்ற தெரிவுக்குழு பின்வரும் தீர்மானத்தை எடுத்துள்ளது. பின்வருவனவற்றை நோக்கமாகக் கொண்டு அதாவது

I ஏற்கனவேயுள்ள விதிக்கோவைகளையும் வழிகாட்டல்களையும் மீளாய்வு செய்தல் மற்றும் புதிய விதிக்கோவைகளையும் வழிகாட்டல்களையும் அபிவிருத்தி செய்தல்

II அவற்றை சட்டபூர்வமானவைகளாகப் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தலும் அவற்றை கட்டாயமானவைகளாக ஆக்குதலும், மற்றும்

III அவை பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்தல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒரு பகுதியாக ஓர் கட்டடத்தொழிநுட்ப பகுதி பிரேரிக்கப்பட்டுள்ளது. எனவே அமைச்சானது குறைப்பு மற்றும் தடுப்பு மீது தீவிர கவனத்தைச் செலுத்துவது கஷ்டமானதாக விருக்கலாமென்ற போதிலும் அது தீவிர கவனத்தைச் செலுத்த வேண்டும்.

**அனர்த்த முகாமைத்துவ நிலையத்தையும் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தையும் இணைத்தல்:**

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் பதவியினர்களுக்கிடையேயுள்ள பங்குதாரர்களையும் உள்ளடக்கிய சகல பங்குதாரர்களுக்கும் கூட ஒத்த தன்மையிலேயே பெயரிடப்பட்டுள்ள தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் பாகம் பற்றி குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. இது அனுசரணையின் தயார் நிலைக்கும் அனுசரணையின் கூட்டிணைப்பிற்கும் வழிவகுக்கும். அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் அனர்த்தத்திற்குப் பிற்பட்ட நிவாரணத்தை கையாளுகின்ற தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்குமிடையே ஓரளவு தொழில் சார் பிரிவு ஏற்படுவதாகத் தெரிகின்றது. எனினும் இவற்றுக்கிடையே இன்னும் கணிசமான மேற் படிதல் இருப்பதுடன் பெயர்கள் மிகவும் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. தெளிவும், வகைகூறலும் முக்கியமானவைகளாகவுள்ள ஓர் அனர்த்தத்தின் விடயத்தில் இது உயிரிழப்புகளை ஏற்படுத்தலாம். இலட்சிய ரீதியாக இந்த இரண்டு நிறுவனங்களையும் ஓர் அமைச்சிற்குள் இணைக்கலாம். அனர்த்தங்கள் மீதான பாரளுமன்றத் தெரிவுக்குழு 2005 ஆம் ஆண்டில் பின்வருமாறு சிபாரிசு செய்துள்ளது. தற்போதைய தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையமானது (தே.அ.மு.நி) பிரேரிக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை உருவாக்குவதற்கான சட்ட அதிகாரங்களுடன் மீளமைப்புச் செய்யப்படவுள்ளது. ஆனால் இது நிகழவில்லை என்பதுடன் இந்த இரண்டு முகவர் நிலையங்களும் ஒன்றாக்கப்படுதல் முக்கியமானதாகும்.

**அரசாங்கம் சாராத அமைப்புகளுடன் ஈடுபடுவதிலும் கூட்டிணைவதிலும் கீழ்மட்ட சமூக அணுகுமுறைகளுக்கு வசதியளிப்பதிலும் அரசாங்கமானது கூடுதலான பலமான பாகத்தை வகிக்க வேண்டிய தேவை உள்ளது:**

அரசாங்கம் சாராத அமைப்புகளும் சமூக அடிப்படையிலமைந்த அமைப்புகளும் (ச.அ.அ) வீதி நாட்டுப்படத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவி வழங்கலாம். ஆனால் இந்த தனித்தனி உள்ளீடுகளைக் கூட்டிணைப்பதிலும் முழுமையாக்குவதிலும் கூடுதலான முக்கியத்துவம் வாய்ந்த பாகத்தை எடுக்க வேண்டிய தேவை உள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையமானது குறைந்த வேலைக்கேற்ற பயிற்சியையும் பிற தலையீடுகளையும் பொறுப்பேற்க வேண்டுமென்பதுடன் திட்ட வட்டமான பாகங்களைக் குறித்துரைத்து திட்டவட்டமான நடவடிக்கைளுக்கு எதிராக பங்குதாரர்களை இணைத்து இடம் பெற்றுக் கொண்டிருக்கும் செய்முறைப்படுத்தலின் தரவுத்தளமொன்றை உருவாக்கி முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மீது தீவிர கவனம் செலுத்துதல் வேண்டும். வீதிப்படத்தின் உருவாக்குதலைத் தொடர்ந்து அரசாங்கமானது வீதி படத்தை கூட்டாக நடைமுறைப்படுத்துவதற்கு போதாத அளவிலான பங்குதாரர் ஈடுபாட்டை மேற்கொள்ளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. அரசாங்கத்திற்கும் அரசாங்கம் சாராத அமைப்புகளுக்கும் ஏனைய அமைப்புகளுக்குமிடையே கூடுதலான முறைமையானதும் கிரமமானதுமான தொடர்பும், உரையாடலும் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை உள்ளது.சுனாமி முற்பட்ட எச்சரிக்கை நிலையம் ஆகியவற்றில் இருந்து கற்க வேண்டிய தேவை உள்ளது.

**அரசாங்கமானது இறுதி எச்சரிக்கைப் பொத்தானை தள்ளவேண்டிய பொறுப்பை வைத்திருக்கின்றது ஆனால் அது இறுதி இலட்சியத்தை பரவவிட்டு அதை அடைவதற்கு பிற அமைப்புகளுடன் பணியாற்ற வேண்டும்:**

எச்சரிக்கை செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் (உதாரணம் சுனாமியின் விடயத்தில் வளிமண்டலவியல் திணைக்களம்)எச்சரிக்கைகள் விடுவதற்கு அரசாங்கம் சாராத அமைப்புகளும் ஏனைய அமைப்புகளும் அரசாங்கத்திற்கான பதிலீடு அல்ல எனினும் எச்சரிக்கையை பரப்புவதற்கும் இறுதி எல்லையை அடைவதற்கும் பல புதுமையான அரசாங்கம் சாராத அமைப்புகள் சமூக அடிப்படையில் அமைந்த அமைப்புகள் தனியார் துறை அமைப்புகளின் முனைவுகளுடன் பணியாற்றலாம்.

**உள்ளூராட்சிச்சபைகள் மத்திய அரசாங்க ஆதரவுடன் ஓர் பெரிய பாகத்தை வகிக்கலாம்:**

இரத்தினபுரி போன்ற அநேக அனர்த்தத்திற்கு உட்படக்கூடிய பிரதேசங்கள் தற்போது அடிக்கடி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் பதவியினர்களினால் உதவி வழங்கப்படும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களை ஏற்கனவே கொண்டிருந்தன. இவற்றிக்கு கீழே கிராம உத்தியோகத்தினர்களினால் தலைமைவகிக்கப்படும் பிரதேச அனர்த்த முகாமைத்துவக் குழுக்களும் கிராமக் குழுக்களும் உள்ளன. சிலவிடயங்களில் அனர்த்த தயார் நிலை, அனுசரணைத்திட்டங்கள் பிரதேச, கிராமத்திட்டங்களில் தயாரிக்கப்பட்டு அல்லது நாளதுவரையானவைகளாக்கப்படுகின்றது. சுனாமி விடயத்தில் தெளிவாகவிருந்தது போல உள்ளூராட்சிச்சபைகளுக்கு உள்நாட்டுத்தேவைகள் பற்றி அடிக்கடி சிறப்பாகத் தெரிவிக்கப்படுகின்றதுடன் அவை தாக்கங்களைக் கண்காணிக்கலாம். ஆனால் அவற்றிற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து தெளிவான கொள்கைகளுக்கு நிதி மற்றும் மனித வளங்களும் தேவையாகவுள்ளது. அதற்கு முகாமைத்துவச் செயற்பாடுகள் என்ன விதத்தில் நிறுவனமயப்படுத்தப்படலாம் என்பது பற்றி உதாரணமாக சமூக சேவை உத்தியோகத்தர்கள் மூலமாக அதைச்செய்யலாமென்பது பற்றிய அக்கறை உண்டு.

## அரசாங்கம் சாராத அமைப்புகளுக்கும் தனியார் துறைக்குமான முக்கியமான சிபாரிசுகள்

**வீதி நிலப்படத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் சாராத அமைப்புகளும் சமூக அடிப்படையிலமைந்த அமைப்புகளும் முக்கியமானவை. ஆனால் இவை ஒன்றுடன் மற்றொன்று கூடுதலான நெருக்கமாகவும், அரசாங்கத்துடன் கூடுதலான நெருக்கமாகவும் செயற்படலாம்:**

அனர்த்தம் குறைத்தல் (உதாரணம் வரட்சி குறைப்பு) அனர்த்தத்திற்கான தயார்நிலை (உதாரணம் முற்பட்ட எச்சரிக்கை அனர்த்த அனுசரணை மற்றும் (உதாரணம்: நிவாரணம்) போன்ற அனர்த்த முகாமைத்துவத்திற்கு சிவில் சமூகத்தினால் செலுத்தப்படும் கவனத்தில் பெரியவளர்ச்சியொன்று உள்ளது. அரசாங்கம் சாராத அமைப்புகளும் சமூக அடிப்படையிலமைந்த அமைப்புகளும் குடும்பங்களுக்கும் அரசாங்கத்திற்கும் தேவைப்படும் தேர்ச்சிகளையும் நிதிகளையும் வழங்கலாம். ஆனால் சமூக அடிப்படையிலமைந்த அமைப்புகளும் அரசாங்கம் சாராத அமைப்புகளும் ஒன்று மற்றொன்றுடனும் அரசாங்கத்துடனும் கூடுதலான நெருக்கமாக வேலை செய்ய வேண்டிய தேவை உள்ளது. அவற்றினால் உருவாக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவத் தலையீடுகளும் தொகுதிகளும் உபயோகமுள்ளனவாகவும். நிலைபேறுடையனவாகவும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. மறு புறத்தில் சில கிராமங்களில் அரசாங்கத்திற்கும், அரசாங்கம் சாராத அமைப்புகளுக்குமிடையே அவை இரட்டிப்பாக்கப்பட்டிருந்தன. வாதுவை, தல்பிட்டியாவிலுள்ள கிராமத்தவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தினால் முதலில் பயற்சியளிக்கப்பட்டது. பின்னர் அவர்களுக்கு இராணுவத்தினாலும் இறுதியாக சர்வோதயாவினாலும் பயிற்சியளிக்கப்பட்டது. அதே வேளையில் பிற இடங்களில் மக்களுக்கு அநேகமாக பயிற்சியளிக்கப்படவில்லை. வேகமாக மாற்றமடைந்து கொண்டிருக்கும் பாதுகாப்பு நிலையில் நெருக்கமான கலந்துரையாடல்கள் வேண்டுகின்ற சிவில் போர்கட்டத்தில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் சாரா அமைப்புகளுக்கு குறிப்பிட்ட கஷ்டங்கள் உள்ளன.

**அனர்த்த முகாமைத்துவத்தில் - காப்புறுதி, தொலைத்தொடர்பு ஊடகங்கள் தனியார் மற்றும் வங்கித் தொடர்புகளில் தனியார்துறையின் பாகம் அரசாங்கத்தினால் வரவேற்கப்படல் வேண்டும்:**

தனியார் துறையினது வலுவைக் குறைப்பதிலும் (காப்புறுதி, அனர்த்த தயார்நிலை) (தொலைத் தொடர்பு ஊடகங்கள்) அனர்த்த அனுசரணை, அறவீடு (வங்கித் தொழில், காப்புறுதி) ஆகியவற்றில் ஓர் முக்கியமான பாகத்தை வகிக்கலாம். தனியார் துறையானது குடும்பங்களுக்கும் அரசாங்கத்திற்கும் தேவைப்படும் நிதியையும் தேர்ச்சியினையும் வழங்கலாம். ஆனால் தனியார் துறையானது வசதிகுறைந்த துறையாகச் செயற்படுவதற்கு ஓர் அரசாங்கக்கட்டுக்கோப்பை அதாவது தெளிவான “விளையாட்டு விதிகளை” வேண்டுகின்றது.

**நுண் காப்புறுதியானது தனியார் துறையினதும் அரசாங்கத்தினதும், அரசாங்கம் சாரா அமைப்பினதும் ஒத்துழைப்பை வேண்டுகின்றது:**

இலங்கை 2004 ஆம் ஆண்டின் சுனாமி அனர்த்தத்தில் இறந்த 36,000 பேர்களில் 1000 உரிமைக்காரர்களுக்கு மட்டுமே மிகக் குறைந்த காப்புறுதிக் கவசத்தைக் கொண்டுள்ளது. காப்புறுதித் தொழிலானது குறைந்த வருமானம் பெறும் குடும்பக்காரர்களின் சார்பில் சுனாமி வீடமைப்புக் கொடுப்பனவு காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களுக்கு நிதியளித்த நன்கொடை அளிப்போர்களுடன் முற்காப்புறுதித் திட்டம் மீது RADA வுடன் சேர்ந்து பணியாற்றுகின்றது. ஆவணப்படுத்தல் நடைமுறையை எளிதாக்கி ஆபத்துக் குறைப்பு விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்கான ஓர் தேவை உள்ளது. ஆனால் நுண் காப்புறுதி கூட்டுச்சமூகப்பொறுப்பாக (கூசபொ) இலாபமில்லாத அடிப்படையில் இப்போதும் அடிக்கடி செய்யப்படுகின்றது. உண்மையான சவால் நுண் காப்புறுதியை எவ்வண்ணம் கூடுதலான இலாபகரமானதாக்குவது என்பதேயாகும்.